புதிய ஜனநாயக மக்கள் முன்னணி

கடந்த கால மக்கள் விரோத அரசியல் சூழலை மாற்றி அமைக்க

# ஊடுருவி மக்களைத் தாக்கும் போர்க் குற்றக் கும்பலும், எதிர்க்கும் மக்களைச் சுற்றிவளைத்து தாக்கும் இராணுவமும்

இலங்கை இராணுவ ஆட்சியும், அதற்கு தலைமை தாங்கும் மகிந்த குடும்ப ஆட்சியும், மக்களை பொய்யர்களாகக் காட்டி அரச பயங்கரவாதத்தை அவர்கள் மேல் ஏவுகின்றது. மக்களை ஊடுருவித் தாக்கும் அலுக்கோசுகள் மீது (தூக்குதண்டனைக் கைதிகளை எவ்வித மனச்சலசலப்புக்களும் இன்றி கொல்ல பயன்படுத்தப்படுபவர்கள்), மக்கள் தற்காப்புடன் கூடிய எதிர்தாக்குதலை நடத்தும் போது, அவர்கள் அரசபடை முகாங்களுக்குள் ஓடி ஒளிக்கின்றனர். இந்த அலுக்கோசுகளுக்கு தலைமை தாங்கும் கோத்தபாய, இந்த இராணுவ அலுக்கோசுகளைப் பாதுகாக்க ஓடோடி வருகின்றார். அரசு அவர்களை கைது செய்யவோ, சட்டத்தின் முன்நிறுத்தவோ, மக்கள் முன்நிறுத்தவோ மறுத்து, பதிலுக்கு மக்கள் மேல் அரச பயங்கரவாதத்தை ஏவுகின்றது. மக்கள் கையில் பிடிபட்டவர்களை, இராணுவத்தினர் மீட்டுச் செல்லுகின்றனர். இது தான் மலையகம், கிழக்கு, புத்தளம், வடக்கு என எங்கும் ஒரேவிதமான நிகழ்வுகளாகவும், அரசின் பதில் நடவடிக்கையாகவும் இருக்கின்றது.

கிட்லரின் மந்திரி கோயபல்ஸ் பாணியில் கோத்தபாய, பொய்யை மீளமீளச் சொல்வதன் மூலம் அரச பயங்கரவாதத்தை மக்கள் மேல் ஏவிவிடுகின்றான். மக்கள் பொய் சொல்வதாகவும், மக்களின் சொந்த தற்காப்பு நடவடிக்கையைப் பயங்கரவாதமாகக் காட்டி மக்கள் மேல் மகிந்த குடும்ப சர்வாதிகார ஆட்சியை ஏவுகின்றது.

இராணுவ ஆட்சி தான் நாட்டின் பொது நடைமுறையாகின்றது. மறுபக்கத்தில் மக்களில் இருந்து மிக வேகமாக அன்னியமாகிவரும் இராணுவமும், அரசும் மக்களை ஒரு பொருட்டாகக் கூட மதிப்பதில்லை.

தன் கொலைகார இராணுவத்தைக் கொண்டு மக்கள் மேல், அரச பயங்கரவாதத்தை ஏவுகின்றது. அடி, உதை, கைதுகள், சிறை என்று கிறிஸ் மனிதர்கள் என்ற பின்னணியில் அரச படை மக்கள் மேலான வரைமுறையற்ற ஒடுக்குமுறையை தொடர்ந்து ஏவுகின்றது. அரசுடன் கொஞ்சிக் குலாவும் கூட்டம் ஆள்காட்டி வேலை செய்தபடி, மக்களை ஏய்க்கும் பம்மாத்து அரசியலிலும் ஈடுபடுகின்றது.

யுத்தம் நடந்த காலத்தில், ஆயிரக்கணக்கில் ஆட்கடத்தல், கப்பம், பாலியல் வன்முறை, சித்திரவதைகள், கொள்ளைகள், படுகொலைகள் … என்ற பலவற்றைச் செய்த கூட்டம், இராணுவத்தினுள் தொடர்ந்தும் இயங்குகின்றது. இதற்காக யாரையும் இலங்கையின் சட்டத்தின் முன் தண்டித்தது கிடையாது. இவற்றை யார் செய்தது என்று, இலங்கை அரசு விசாரணை செய்யக் கூட தயாராகவில்லை. இவை அனைத்தும் அரசின் ஆதரவுடன் தான் நடந்தது.

அப்படிப்பட்ட கூட்டம், அரசின் ஆதரவுடன் தான் தொடர்ந்தும் குற்றக் கும்பலாக இயங்குகின்றது. மர்ம மனிதர்களாக, பயங்கர கிரிமினல்களாக அரசின் துணையுடன் மக்களை தாக்குவதும், தப்பியோடி படைமுகாம்களில் ஒழித்துக் கொள்வதுமாக இருப்பது, மக்களை விழிப்படைய வைத்திருக்கின்றது.

இந்த கிறிஸ் மனிதர்கள் பின்னணியில் அரசு இருப்பது மிகத் தெளிவாகின்றது. வெவ்வேறு பிரதேசத்தில் ஒரே மாதிரியான திட்டமிட்ட இந்தச் செயல்கள், இந்த உண்மையை வலுப்படுத்துகின்றது. மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதத்தை ஏவிப் பாதுகாக்கின்ற அரசின் செயல்பாடு, இதை மேலும் உறுதி செய்கின்றது.

பொது மக்கள் மேல் அச்சத்துக்குரிய சூழலை திணித்து, அடக்குமுறைச் சட்டங்களைத் திணிக்க இது போன்ற சூழலை அரசு திட்டமிட்டு ஏற்படுத்தியுள்ளது. மக்களை இரக்கமின்றி அச்சம் மற்றும் பீதிக்கூடாக அடக்கியாள, அரசு வன்முறையை ஏவுகின்றது. இராணுவத்தைக் கொண்டு மக்களை ஒடுக்கி, அச்சமூட்டும் வண்ணம் ஒரு பொதுச் சூழலை உருவாக்குகின்றது.

ஆனால் இந்த ஒடுக்குமுறையாளர்கள் நினைப்பது ஒன்று. நடப்பது வேறு. மக்கள் இதை அரசுக்கு எதிராக இனங்கண்டு போராடுவதும், தங்களைத் தாங்கள் அணிதிரட்டிக் கொண்டு இதை எதிர் கொள்வதும் அரசு எதிர்பாராத ஒன்று. ஒரு கிராமத்தில் இருந்து அடுத்த கிராமம் என்று ஒரு தொடர் மக்கள் கண்காணிப்புடன் கூடிய மக்கள் விழிப்புணர்வு, அரசுக்கு எதிராக ஒருங்கிணைகின்றது. அரச உளவுப் பிரிவு கூட கிராமங்களுக்குள் செல்ல முடியாத வண்ணம் மக்கள் கண்காணிப்பு என்பது, இந்த ஒடுக்குமுறையாளர்களை எதிர்காலத்தில் முறியடிக்கும் அரசியல் முன்முயற்சிக்கு உரிய அரசியல் ரீதியான முன்னோடிச் செயற்பாடாகும். இதை மக்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் நாம் அனைவரும் இருக்கின்றோம்.

மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்கும் பொருட்டு சுயமாக ஈடுபடும் போராட்டங்களை நாம் ஆதரிக்கின்றோம். இப் போராட்டத்தின் போது இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களிற்கு நாம் செவ்வணக்கம் செலுத்துகின்றோம்

**மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதத்தை நிறுத்து!**

**நடந்ததை விசாரிக்க சுதந்திரமான விசாரணை நடத்து!**

**இராணுவத்தை முகாம்களில் முடக்கு!**

**இராணுவ முகாம்களை நீக்கு!**

**சிவில் சமூக சட்ட நடைமுறைகளை அமுல்படுத்து!**

**மக்களின் தற்காப்பு நடவடிக்கையை கொச்சைப்படுத்தாதே!**

**தற்காப்புக்கான மக்கள் கமிட்டிகளை அங்கீகரி!**

**பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகுந்த இழப்பீடு வழங்கு!**

**மக்கள் மேலான பொய்க்குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விடுவி!**

புதிய ஜனநாயக மக்கள் முன்னணி

பிரசுரம்

27.08.2011